# நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

(2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரை.)

**01. மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டங்களின் திருத்தங்கள் - 2018**

மாகாணங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க 2018 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திட்டங்களில் துறைரீதியாக முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயப்பரப்பின் கீழ் வரும் பரந்த செயற்பாட்டுப் பகுதியில் திருத்தங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**02. 2019 ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுத் தேவைகளை மாகாணங்களிடமிருந்து பெறுதல்.**

அனைத்து மாகாணங்களிடமிருந்தும் 2019 ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுத் தேவைகளை நிதி ஆணைக்குழு பெற்றுக்கொண்டது. சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் மாகாணங்களின் தேவைகள் குறித்து மீளாய்வுக் கூட்டங்கள் மூன்றாவது காலாண்டில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

**03. மூலோபாயத்திட்ட மீளாய்வு / அமுலாக்கம்.**

நிதி ஆணைக்குழுவின் மூலோபாயத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**04. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை – 2017**

2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவினது ஆண்டறிக்கையின் ஆங்கில மொழிமூல பதிப்பு நிறைவடைந்துள்ளதோடு, சிங்களம் மற்றும் தமிழ் மொழியிலான மொழி பெயர்ப்பு இடம்பெற்று வருகின்றது. இது விரைவில் ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

**05. மாகாண கணக்காய்வு அறிக்கைகளை பரிசீலனை செய்தல்**

கணக்காய்வாளர் திணைக்களத்தினால் தயார் செய்யப்பட்ட வடமாகணத்தின் கணக்காய்வு அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதியுடன் எமது அவதானக் குறிப்புக்களும் ஆளுனர், பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**06. நிதி ஆணைக்குழுவின் புதிய அலுவலகக் கட்டிட கட்டுமானம்.**




நிதி ஆணைக்குழுவுக்கு சொந்தமான அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றது. மூன்று முன்னேற்ற கூட்டங்கள் நிதி ஆணைக்கழுவிலும் மூன்று தொழில்நுட்ப கூட்டங்கள் திட்ட ஆலோசனைப் பிரிவு (மொரட்டுவ பல்கலைக்கழக கட்டட நிர்மாண பீடம்) மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

2018 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட 180 மில்லியன் ரூபாவில் 139.26 மில்லியன் ரூபா, இரண்டாம் காலாண்டில் இறுதியில் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டது. இச்செயற்திட்டமானது திட்டமிட்டதை விட 95 நாட்கள் தாமதமாகியிருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இக்கட்டுமானப் பணியானது ஆகஸ்ட் 31 ஆம் திகதி நிறைவடையும் என அட்டவணைப்படுத்தப்பட்டது.

## 07. நிதி ஆணைக்குழுவின் தரவுத்தளம் - MIS

நிதி ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்காக தரவுத் தளத்தினை (MIS) விருத்தி செய்யும் பொருட்டு, ஆசிய பவுண்டேஷன் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக கணணிப்பரிவு (UCSC) என்பவற்றுடன் நிதி ஆணைக்குழு பல தொடர் கலந்துரையாடல்களை நடத்தியது.

இது சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று நிதி ஆணைக்குழு மற்றும் ஆசிய பவுண்டேஷனுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டது. இருப்பினும் நிதி நிதி ஆணைக்குழுவின் கண்ணோட்டத்தில் காலம் மற்றும் செலவினக் கிரயங்கள் அதிகமாக இருப்பதனால் இதற்கு ஒரு மாற்று மென்பொருள் உருவாக்குனரை தெரிவு செய்யுமாறு ஆசிய பவுண்டேஷன் தெரிவித்துள்ளது.

## 08. நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு

நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு உருவாக்கப்பட்டு, 2016ல் மாண்புமிகு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனால் மேன்மை மிகு ஜனாதிபதி அவர்கள் இப்பணிக்கான ஒரு சட்ட வரைஞரை நியமிக்கும் பொருட்டு 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி ஒரு அமைச்சரவைப் பத்திரத்தினை முன்வைத்துள்ளார். நிதி ஆணைக்குழுவானது மேற்பார்வைக்காக வேண்டி சட்ட வரைஞரிடமிருந்து ஆரம்ப சட்ட வரைபை பெற்றது. நிதி ஆணைக்குழு சட்ட வரைபை படித்ததன் பின்னர் தனது அவதானக் குறிப்புக்களுடன் பதிலளித்துள்ளது.

## 09. பிரதம செயலாளர்கள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுடனான விஷேட சந்திப்பு.



ஒன்பது மாகாண பிரதம செயலாளர்களுடனான விஷேட சந்திப்பொன்று 2018 ஏப்ரல் 10ம் திகதி நிதி ஆணைக்குழுவில் இடம்பெற்றது. மாகாண சபைகள் எதிர்கொள்ளும், அபிவிருத்தி மற்றும் நிருவாக செயற்பாடுகளின் கொள்கை மற்றும் பிரச்சினைகளை கலந்துரையாடுவதே கூட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்நது. இக்கூட்டத்தில், அவர்களது வருடாந்த அபிவிருத்தி செயற்பாடுகளின் பல விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டன.

## 10. நிதி ஆணைக்குழுவின் கொள்கைப் பரிந்துரைகள் பற்றிய கலந்துரையாடல்கள் - 2018

நிதி ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், ஜனாதிபதி செயலாளரின் ஏற்பாட்டில், நிதி ஆணைக்குழுவின் கொள்கைப் பரிந்துரை தொடர்பான கூட்டம் 2018 மே மாதம் 23ம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் வரித்தரை அமைச்சின் செயலாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கலந்துரையாடப்பட்ட பின்னர் பிரதம செயலாளர்களால் நிதி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

**11. மாகாண இறைவரி ஆணையாளர் மற்றும் மாகாண போக்குவரத்து அலுவலர்களுடனான கூட்டங்கள்.**

2018 ஏப்ரல் மாதம் 2ம் திகதி நிதி ஆணைக்குழு மாகாண இறைவரி ஆணையாளர் மற்றும் மாகாண போக்குவரத்து அதிகாரிகளுடன் இரண்டு வெவ்வேறு சத்திப்புக்களை நடாத்தியது.

மாகாண போக்குவரத்து மற்றும் இறைவரித் துறையினர்களினால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாட அனைத்துப் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதே இதன் நோக்கமாகும்.





**12. நிதி ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கையேடு**

நிதி ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கையேடு தயாரிக்கப்படுகிறது. கையேட்டில் நிதி முகாமைத்துவம், அவசியமான மதிப்பீட்டு நடைமுறைகள், நிதி ஆணைக்குழுவின் பொது நிர்வாக நடைமுறைகள் உள்ளடங்களாக மூன்று முக்கிய பிரிவுகளின் கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நிதி ஆணைக்குழவின் உள்ளக் கொள்கைச் செயற்பாட்டிற்கான தனியான கையேடும் தயாரிக்கப்படுகிறது.

**13. களுத்துறை மாவட்ட - கனெவெல அணைக்கட்டு மற்றும் வேளாண்மை கருத்திட்டங்கள் (மே 10, 2018ம் ஆண்டளவில் நல்ல வேளாண்மை முறைகள்)**



கனெவெல அணைக்கட்டு மற்றும் பல விவசாய திட்டங்கள் (நல்ல வேளாண்மை நடைமுறைகள் - Good Agricultural Practices) புணரமைக்கப்படுவதை மீளாய்வு செய்வதற்காக களுத்துறை மாவட்டத்திற்கு, மேல் மாகாண மற்றும் நிதி ஆணைக்குழுவின் அதிகாரிகள் விஜயம் செய்தனர். அதன்போது பல்வேறு பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. அது சம்பந்தமாக விஷேட கூட்டம் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் திகதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடைபெற்றது. துணைப் பிரதம செயலாளர் திட்டமிடல் (மேல்), செயலாளர், விவசாய அமைச்சு (மேல்), விவசாய மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர், மேல் மாகாண ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பிரதிநிதியும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.





**கனேவெல அணைக்கட்டின் புணரமைப்பு**





**நல்ல வேளாண்மை நடைமுறைகளுக்குற்பட்ட விவசாய திட்டங்கள்**

## 14. அதிகாரிகளின் திறன் விருத்தி

**பயிற்சி**

ஆணைக்குழுவின் இரண்டு அலுவலர்கள் கணணி இயக்குவதற்கான அனுமதி (SLIDA Computer Drive License) மற்றும் உழைக்கும் வருமானத்தின் மீதான வரி (Pay As You Earn PAYE) ஆகிய இரு உள்நாட்டு பயிற்சித் திட்டங்களில் கலந்துகொண்டனர்.

**விருந்தினர் விரிவுரை**

மோட்டார் போக்குவரத்து திணைக்கள மோட்டார் போக்கவரத்துப் பரிசோதகர் திரு. சி. கே எதிரிமுனி ''ஓட்டுனர்களுக்கான பண்பும் தராதரமும் மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு சம்பந்தமான ஒரு விளக்கத்ததை வழங்கினார்

**அலுவலர்களின் ஆய்வு**

காலாண்டில் நிதி ஆணைக்குழுவால் பல சிறப்பு கற்கை நெறிகள் நடாத்தப்பட்டன.

| பெயர் | | தலைப்பு |
|---|---|---|
| • திருமதி எரந்தி குணசேகர (உதவிப் பணிப்பாளர்) | - | நீலப் பசுமைப் பொருளாதாரம் |
| • திரு திசர கசுன் புஷ்பசிரி (ICT அதிகாரி) | - | வருவாய் எதிர்வுகூறல் |
| • திருமதி இந்திரா தேவி (உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | - | மாகாண மீண்டெழும் செலவின மதிப்பீடு |
| • திருமதி பி. டி. சி. நிரோஷி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) | - | கிராம அபிவிருத்தி |

**15. நிதி ஆணைக்குழுவின் செயல்திறன் அறிக்கைகள்**

2017 ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குரிய நிதி ஆணைக்குழுவின் செயலாற்று அறிக்கை 2018ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, அத்தடன் 2018ம் ஆண்டின் முதல் காலாண்டிற்குறிய செயல்திட்ட அறிக்கை 2018ம் ஆண்டு ஏப்ரல் 27ம் திகதி அரசியலமைப்பு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

**16. அலுவலர்களை சேவைக்கு இணைத்தலும் இடமாற்றல் செய்தலும்**

நான்கு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் நிதி ஆணைக்குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்டனர், அத்துடன் ஒரு வாகன ஓட்டுனர் இடமாற்றப்பட்டார்

**17. உள்ளகக் கணக்காய்வுக் குழு**

உள்ளக கணக்காய்வுக் குழுவின் இரண்டாவது காலாண்டு கூட்டம் 2018ம் ஆண்டு ஜுன் மாதம் 12ம் திகதி நடைபெற்றது. இதில் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர், கணக்காய்வாளர் நாயகத்தின் பணிப்பாளர் ஆகியோர் பங்குபற்றினர். அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்காக வேண்டி கூட்டத்தின் முடிவுகள் நிதி ஆணைக்குழுவின் அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. உள்ளக கணக்காய்வு ஒழுங்குமுறை விடயங்களுக்கு மேலதிகமாக செயல்திறன் விடயங்களும் கவனிக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு முடிவு செய்தது.

**18. தேசிய மற்றும் மாகாண மட்டங்களை பொருத்தமான ஒருங்கிணைப்பு மூலம் அபிவிருத்தி செய்து விருத்தி செய்வதற்கான பயிற்சிப் பட்டறைகளின் பின்தொடர்வுகள்**

மேற்குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடல்கள் 2015ம் ஆண்டிலிருந்து ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து நடாத்தப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நேரடி முகவர்கள் மேற்கொண்ட விடயங்களை நிதி ஆணைக்குழு ஆய்வு செய்து வருகிறது. இதற்கடையே சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பட்ட கடிதத்தைத் தொடர்ந்து 2018ம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் முன்னேற்ற அறிக்கை பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## 19. நிதி ஆணைக்குழுவுக்கு மருத்துவ உத்தியோகத்தர்களின் வருகை



நிதி ஆணைக்குழுவின் வகிபாகம் மற்றும் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்காக வைத்திய நிருவாகிகள் சிலர் நிதி ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்தனர். அனைத்து மாகாணங்களுக்கமான பரிந்துரை செயல்முறை, திட்டமிடல் மற்றும் பாதீட்டு வழிமுறைகள், மாகாணங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள், மாகாணங்களின் வருவாய் மூலங்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதியளித்தல் மற்றும் மாகாண பதவியணியினர் போன்ற விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

## 20. பங்குபெறுதல் / கலந்துகொண்ட கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

தலைவர், செயலாளர் மற்றும் சில மூத்த அலுவலர்கள் பின்வரும் கூட்டங்கள் / செயலமர்வுகளில் கலந்துகொண்டனர்.

- இலங்கையின் நகரங்கள்
- உள்ளூர் அபிவிருத்தித் துணைத் திட்டம்
- ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு
- நிலைபேண் அபிவிருத்தி இலக்குகள்
- உள்ளூராட்சி மன்றங்களின் பதவியனியினருக்கான அனுமதி
- மாகாணங்களக்கிடையிலான மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்
- போக்குவர்து இணைப்பு முகாமைத்துவத் திட்டம்
- நிதி ஒழுங்கு முறை சட்ட வரைவு
- தொற்றா நோய்கள் சம்பந்தமான முதலாவது வருடாந்த சார்க் கூட்டம்
- இலங்கையிலுள்ள சமூக தொழில் நிறுவனங்களின் நிலை

## 21. ஆணைக்குழுக் கூட்டங்கள்

- பின்வரும் ஆணைக்குழுக் கூட்டங்கள் காலாண்டில் நடைபெற்றன.
  - ஏப்ரல் 25, 2018
  - மே 12, 2018
  - ஜுன் 09, 2018
- ஒழுங்கு முறையாக ஒவ்வொரு ஆணைக்குழு கூட்டத்திற்கும் முன்னதாக ஆணைக்குழுவின் உப குழுக்கள் சந்தித்தன.
- கூட்டுக் குழு கூட்டங்கள் - வாரா வாரம் நடைபெற்றன.
- அலுவலர் கூட்ங்கள் - 05.04.2018, 31.05.2018 மற்றம் 29.06.2018